கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்
1கொரிந்தியர் 1:30

# ஞான ஒலி

இணைய வார இதழ்

www.newwisdomministries.com



ஞானம் 5 - ஒலி 48 | 27-11-2022



# வீரனுக்கே விடுதலை



# யாமிருக்க பயமேன்...



அருட்பணி. **சைமன் பீட்டர்**

இயேசு கிறிஸ்துவில் பிரியமான ஞான ஒலி இணைய இதழின் வாசக சகோதர, சகோதரிகளே, உங்கள் அனைவரையும் அன்புடன் வாழ்த்துவதில் அளவில்லா மகிழ்ச்சி அடைகின்றேன்.

மனிதனுக்கு எதிரி எதிரில் இல்லை. மாறாக, அகத்தில் என்று சொன்னால் அது மிகையாகாது. நமக்கு நாமே துணை என்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவுக்கு உண்மை நமக்கு நாமே எதிரி என்பது.

பயம் கொள்ளும் மனிதன் தன்னையும் தன் வாழ்வையும் பயனற்றதாக்கிக் கொள்கிறான் என்பது உலக மகா உண்மையாகும். ஆகவேதான் இயேசு கிறிஸ்து பயப்படாதீர்கள் என்று 365 தடவை கூறியுள்ளதாக திருவிவிலியம் நமக்கு சுட்டிக் காட்டுகின்றது. வருடம் முழுவதும் அதாவது வருடத்தின் 365 நாட்களிலும் பயப்படாமல் வாழ வேண்டும் என்று கூறுகின்றார்.

இயேசு மட்டுமல்ல பரிசுத்த பரலோகத் தந்தையும்கூட இறையடியார்களை பயப்படாதீர்கள் என்று திடப்படுத்தினார். நான் உங்களுடன் இருக்கின்றேன் என்று அவர்களை உற்சாகப்படுத்தினார்.

விடுதலைப் பயணம் நூலில் அதிகாரம் 23, 30வது இறை வசனத்தில் இவ்வாறு படிக்கின்றோம்...

நீ பலுகிப் பெருகி நாட்டைக் கைப்பற்றும் வரை சிறிது சிறிதாக அவர்களை உனக்கு முன்னின்று துரத்திவிடுவேன்... என்று பரலோக தந்தை இஸ்ரயேல் மக்களைப் பார்த்துக் கூறுகின்றார்...

கடவுள் இஸ்ரயேல் மக்களை எகிப்திலிருந்து விடுவித்து அழைத்து வந்து அவர்களை கானான் நாட்டில் குடியிருக்க வைக்க எல்லா ஏற்பாடுகளையும் செய்கின்றார்.

கானான் நாட்டில் வாழும் மக்கள் இஸ்ரயேல் மக்களுக்கு இடைஞ்சல்களாக இருக்கின்றார்கள். அங்கு வாழ்ந்த ஏழு வகையான இன மக்களைக் கண்டு இஸ்ரயேல் மக்கள் பயப்படுகின்றனர். ஆனால் கடவுள் அவர்களைக் கண்டு பயப்படாதீர்கள் என்று தைரியம் தருகின்றார்.

இணைச்சட்டம் 7-ம் அதிகாரம் 1 மற்றும் 2-ம் வசனங்களில் கானான் தேசத்தில் வாழ்ந்த ஏழு இன மக்களைப் பற்றி இவ்வாறு கூறுவதைப் பார்ப்போம்...

நீ உரிமையாக்கிக் கொள்ளப்போகும் நாட்டில், உன் கடவுளாகிய ஆண்டவர் உன்னைப் புகச்செய்து, உன்னைவிட வலிமையிலும் எண்ணிக்கையிலும் மிகுந்த மக்களாகிய இத்தியர், கிர்காசியர், எமோரியர், கானானியர், பெரிசியர், இவ்வியர், எபூசியர் எனும் ஏழு மக்களினங்களையும் உன் கண்முன்னே விரட்டியடித்து, உன் கடவுளாகிய ஆண்டவர் அவர்களை உன்னிடம் கையளிக்கும்போது, நீ அவர்களை முறியடித்து முற்றிலும் அழிப்பாய். அவர்களோடு உடன்படிக்கை செய்து கொள்ளவோ, அவர்களுக்கு இரங்கவோ வேண்டாம்...

இஸ்ரயேல் மக்களுக்கு எதிராக இருப்போருக்கு எதிராகத் தான் இருப்பதாக கடவுள் கூறுகின்றார். அவர்களை முறியடிக்கும்படி இஸ்ரயேலுக்கு கட்டளை கொடுப்பதோடு அவர்களின் அந்த போரில் துணையும் செய்வதோடு அவர்களுக்கு வெற்றியும் தருகின்றார் என்பதை நாம் கருத்தில் கொள்வோம்.

இஸ்ரயேலுக்கு எதிராக இருந்த அந்த மக்களினம் ஏழு என்று திருவிவிலியம் கூறுகின்றது.

அவர்கள்...

1. இத்தியர்.

2.கிர்காசியர்.

3.எமோரியர்.

4.கானானியர்.

5.பெரிசியர்.

6.இவ்வியர்.

7.எபூசியர்.

இந்த ஏழு இனங்களைப்பற்றி இந்த வசனம் இவ்வாறு கூறுகின்றது... அவர்கள் இஸ்ரயேல் மக்களைவிட எண்ணிக்கையில் பெரியவர்கள் மற்றும் வலிமையானவர்கள் என்று.

இன்று நமது கிறிஸ்தவ வாழ்வுக்கு எதிராக நமக்குள் இருக்கின்ற அந்த ஏழு எதிரிகள் நமது பலவீனங்கள்தான், பாவ வேட்கையைத் தூண்டும் இறைவிரோத ஆசைகள்தான். நமக்கு எதிராக இருக்கின்ற சக்திகள் எண்ணிக்கையில் ஏராளம்... அதுவும் இன்றைய நவீன உலகத்தில் அதன் எண்ணிக்கையும் நவீனமயமானதாக உள்ளது. திருச்சபை கணக்கிட்டு தலையான பாவங்கள் ஏழு என்று நமக்குக் கற்றுத் தந்துள்ளது... ஆனால் இன்று அவற்றின் எண்ணிக்கை அதிகம் என்பது நிதர்சன உண்மை...

கானான் தேசத்தில் வாழ்ந்த அந்த ஏழு இனங்களில் முதலாவதாகக் கூறப்படுவர்கள் இத்தியர்... இத்தியர் என்ற வார்த்தையின் அர்த்தங்களில் முதன் மையானது... அவர்கள் பயத்தில் வாழ்பவர்கள்... அவர்கள் பயத்திலேயே வாழ்வதோடு... மற்றவரையும் பயப்படுத்தி பயத்தில் வாழ வைப்பவர்கள் என்பதாகும்.

பயம்தான் ஒருவருக்கு மிகப்பெரிய சத்ரு. பயம் எதையும் முடமாக்கும். குற்றமுள்ள மனம்தான் குறுகுறுக்கும் என்று சொல்வார்கள். குற்றம் செய்தவர் யாரைக் கண்டாலும் பயப்படுவார்கள் இல்லையா? அரண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேய்.

ஆகவேதான் பாவம் செய்த ஆதாம் கடவுளை சந்திக்கப் பயப்பட்டு ஒளிந்து கொண்டான்.

ஆனால் கடவுள் தன் பிள்ளைகளைக் கண்டு பயம் கொள்ளாதீர்கள் என்று கூறுகின்றார். இறையச்சம் ஞானத்தின் தொடக்கம். நல்லவர்களுத்தான் இறையச்சம் இனிமையானதாக இருக்கும். ஆனால், பாவிகளுக்கு இந்த இறையச்சம் பயமாக மாறும்.

இறைவனோடு இருந்த அந்த இஸ்ரயேல் மக்களுக்கு எதிராக இருந்த அனைவரையும் முறியடிக்கும்படி அந்த ஏழு இனங்களை அவர்களிடம் ஒப்படைத்தார்.

அதுபோல நமது பரிசுத்தமான வாழ்வுக்கு எதிராக நமக்குள்ளும், நமக்கு வெளியிலும் உள்ள அனைத்தையும் முறியடிக்கும்படி நம்மிடம் ஒப்படைக்கின்றார் கடவுள்.

இஸ்ரயேல் மக்களைப் பார்த்து,

அவர்களோடு உடன்படிக்கை எதுவும் செய்து கொள்ளாதீர்கள்... அவர்களுக்கு இரக்கம் காட்டாதீர்கள்... அவர்களை முழுமையாக முறியடியுங்கள் என்று கட்டளை கொடுத்தார்.

அதுபோல... நமது பலவீனங்களோடு நட்புறவு கொள்ளக் கூடாது என்று கூறுகின்றார். இன்று மட்டும் தவறு செய்து கொள்வேன்... நாளையிலிருந்து அதை விட்டுவிடுவேன் என்ற சுயபச்சாத்தாபம் கொள்ளாதே... இப்படி உடன்படிக்கையும் செய்யாதே என்றும் அதே கடவுள் இன்றும் நம்மைப் பார்த்துக் கூறுகின்றார்... இதுவே மீட்பின் தாமதத்துக்குக் காரணம்.

நமது பலவீனத்திற்கு எதிரான நமது போராட்டத்தில் நமது ஈடுபாட்டின் தரத்தைப் பொறுத்தே நமது வெற்றி அமையும். கடவுள் இஸ்ரயேலுக்கு எதிரானவர்களை சிறிது சிறிதாக விரட்டி அடிப்பேன் என்று சொன்னதுபோல... நமது முயற்சியைப் பொறுத்தே... இந்த வெற்றி கிட்டும்... பலவீனமான நம்பிக்கையின் வெற்றி சிறிது சிறிதாகத்தான் இருக்கும். உறுதியான நம்பிக்கையும், முயற்சியும்... மலைகளை பெயர்ப்பது போல... சாத்தானை விண்ணிலிருந்து நெருப்பைப் போல மண்ணில் வீழ்த்தி வெற்றியடையும்.

அதற்காக பரிசுத்த ஆவியின் ஏழு கொடைகளை நமக்குத் தந்துள்ளார். நமது பலவீனங்களை அழிக்கின்ற நமது போராட்டத்தில் நம்மோடு இறைவனும் துணையாக இருக்கின்றார். நமது பலவீனம், விண்ணக ஆற்றலோடு இணைகின்றபோது... நமது எதிரிகள் எண்ணிக்கையில் பெரிதாக இருந்தாலும், நம்மைவிட வலிமையானவர்களாக இருந்தாலும் அவர்களை வீழ்த்துவது எளிது என்பதுதான் இன்றைய இறைச்செய்தி.

நரகத்துக்குப் பயந்து நல்லவராக இருப்பதைவிட... இறைவனின் அன்பையும், துணையையும் இழந்துவிடக்கூடாது என்ற தெய்வ பயத்தோடு வாழ்வதே பேருண்மை.

இந்த உண்மை நம்மை விடுவிக்கும்.

Let love be genuine. Abhor what is evil; hold fast to what is good. Love one another with brotherly affection. Outdo one another in showing honor. Do not be slothful in zeal, be fervent in spirit, serve the Lord. Rejoice in hope, be patient in tribulation, be constant in prayer. Contribute to the needs of the saints and seek to show hospitality.

Romans 12:9-13



# விவிலியம் அறிவோம் - 66



அருட்பணி. ஆ. அலெக்ஸ் CMF

## மோசே இத்திரோ சந்திப்பு

விப 18 வது பிரிவு மோசேயும் அவரது மாமனார் இத்திரோவும் சந்திப்பது பற்றிக் கூறுகிறது. இந்தப் பாடம் ஏலோகீம் மரபிலிருந்து வருகிறது. விப 18 வது பிரிவு இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. முதல் பகுதி மோசேயும் அவரது மாமனாரும் சந்திப்பது பற்றிக்கூறுகிறது. இந்த சந்திப்பு ஒரு நட்புறவு விருந்துடன் நிறைவு பெறுகிறது (18:1-12). இரண்டாவது பகுதி இஸ்ரயேலில் நீதி வழங்கும் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுவது பற்றிப் பேசுகிறது. எகிப்திலிருந்து வெளியேறி பாலைவனம் வழியாகப் பயணம் செய்த மோசேயும் இஸ்ரயேல் மக்களும் கடவுளின் மலைக்கருகில் பாளையம் இறக்கியிருக்கின்றனர். கடவுளின் மலை என்பது சீனாய் மலையைக் குறிக்கும். சீனாய் மலையைச் சுற்றிய பாலைவனப் பகுதிகளில் அவர்கள் பாளையமிறக்கியிருக்கலாம். அந்த நேரத்தில் மோசேயின் மாமனாரான இத்திரோ மோசேயைச் சந்திக்க வருகிறார். கடவுள் இஸ்ரயேல் மக்களுக்குச் செய்தது அனைத்தையும் கேள்விப்பட்டவராக, மோசேயின் மனைவியான சிப்போராவையும் அவரது இரண்டு மகன்களான கெர்சோம் மற்றும் எலியேசர் ஆகியோரையும் அழைத்துக்கொண்டு மோசேயைச் சந்திக்க வருகின்றார். இத்திரோ வாசகர்களுக்கு ஏற்கனவே அறிமுகம் ஆனவர்தான். விப 2:11-21இல் இத்திரோவின் மகளான சிப்போரா மோசேக்கு மணமுடித்து வைக்கப்படுவதைப் பார்க்கிறோம். விப 4:20 இன் படி மோசே எகிப்திற்குச் செல்லும்போது மனைவி மற்றும் மகன்களையும் அழைத்துச் செல்கிறார்; ஆனால் விப 18:2 மோசே தன் மனைவியையும் மகன்களையும் இத்திரோவிடம் திருப்பி அனுப்பியதாகக் கூறுகிறது. ஏன் அவர்களை இத்திரோவிடம் அனுப்பினார் என்பது கூறப்படவில்லை.

இத்திரோ மிதியானின் அர்ச்சகர் என முதல் சொற்றொடரில் அறிமுகப்படுத்தப்படுகின்றார். மிதியானியர்கள் எந்தக் கடவுளைப் பின்பற்றினார்கள் என்பதற்கான பதிவுகள் எதுவுமில்லை. பொதுவாக ஒரு ஆலயத்தில் அர்ச்சகர்களாக இருப்பவர்கள் அந்த ஆலயத்தில் வீற்றிருக்கும் கடவுளின்; பணியாளர்களாக இருப்பார்கள். பல கடவுளர்களை மக்கள் வழிபட்டுவந்த அந்தக் காலகட்டத்தில் பிற கடவுளர்களின்; ஆற்றலை ஒருவர் தெரிந்துகொள்ளும் போது அதை அறிக்கையிடத் தயங்குவதில்லை. இத்திரோ, கடவுள் மோசேக்கும் அவர் தம் மக்களாகிய இஸ்ரயேலருக்கும் செய்தது அனைத்தையும், ஆண்டவர் இஸ்ரயேலை எகிப்தினின்று வெளியேறச் செய்ததையும் கேள்வியுற்றவராக மோசேயைச் சந்திக்க வருகிறார். மோசே அவரது மாமனாரையும் மனைவி மற்றும் மகன்களையும் எதிர்கொண்டு சந்திக்கின்றார். அவர்களை வரவேற்கின்றார். மோசே தன் மாமனார் முன் தாழ்ந்து பணிந்தார்; அவரை முத்தமிட்டார். இருவரும், ஒருவர் ஒருவரிடம் நலம் விசாரித்துக்கொண்டு, பாளையத்தில் புகுந்தனர் என வாசிக்கிறோம். வணங்குதல் அல்லது தாழ்ந்து பணிதல் போன்ற செயல்கள் தன்னைவிட உயர்ந்தவராகக் கருதப்படுகின்ற ஒருவருக்குக் கொடுக்கப்படுகின்ற மரியாதை. முத்தமிடுதல் நட்புடன் வரவேற்பதைக் குறிக்கிறது. விவிலியத்தில் இந்த ஒரு இடத்தில் மட்டுமே தாழ்ந்து பணிதல் மற்றும் முத்தமிடுதல் ஆகிய இரண்டு செயல்களும் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒருவரையொருவர் நலம் விசாரித்தபின் மோசே இத்திரோவுடன் உரையாடுகிறார்.

மோசேக்கும் இத்திரோவுக்கும் இடையில் நடக்கின்ற உரையாடலில் இத்திரோ இஸ்ரயேலின் கடவுளான யாவே ஆண்டவரை, அனைத்துத் தெய்வங்களையும் விட உயர்ந்தவர் எனப் போற்றுகின்றார். இத்திரோ இவ்வாறு கூறுவதால் அவர் யாவே ஆண்டவரை வழிபடுபவராக அல்லது யாவே சமயத்தில் இணைய விரும்புபவராக இருக்கலாம் என அறிக்கையிடுபவர்கள் உண்டு. அவ்வாறு இருக்கவேணடும் என்ற அவசியமில்லை. ஏனெனில் பண்டைய காலத்தில் பல கடவுளர்களை மக்கள் வழிபட்டு வந்தச் சூழ்நிலையில் ஒரு கடவுள் வல்லமை வாய்ந்தவராக வெளிப்பட்டால் அவரை உயர்வாகப் பேசுவது வழக்கமானதுதான். இத்திரோ யாவே ஆண்டவர் இஸ்ரயேல் மக்களுக்காகச் செய்த வல்ல செயல்களைக் கேள்விப்பட்டுதான் மோசேயைச் சந்திக்க வருகிறார். மேலும் மோசேயுடன் அவர் செய்கின்ற உரையாடல் மூலமாகவும் ஆண்டவர் இஸ்ரயேல்

மக்களுக்குச் செய்தவை அனைத்தையும் அறிந்துகொள்கின்றார். எனவே யாவே ஆண்டவரை அவர் உயர்வாகப் பேசுவதில் வியப்பில்லை. அதன்பின் இத்திரோ கடவுளுக்கு எரிபலியையும், பலிகளையும் செலுத்துகிறார். இங்கே ஒரு கேள்வி எழுகிறது. இத்திரோ எந்தக் கடவுளுக்குப் பலிசெலுத்துகிறார்? அவர் யாவே ஆண்டவருக்குப் பலி செலுத்தினாரா? அல்லது வேறு தெய்வங்களுக்குப் பலிசெலுத்தினாரா? இத்திரோ செலுத்துகின்ற பலி ஆரோன் மற்றும் இஸ்ரயேல் தலைவர்களின் முன்னிலையில் நடப்பதால் யாவே கடவுளுக்குத்தான் அவர் பலி செலுத்தியிருக்கவேண்டும். பலியைத் தொடர்ந்து ஆரோனும் இஸ்ரயேலின் எல்லாத் தலைவர்களும் இத்திரோவுடன் ஒன்றாக அமர்ந்து உணவருந்துவதும் அவர் யாவே ஆண்டவருக்குத்தான் பலிசெலுத்தியிருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதாக உள்ளது. மோசே இந்த விருந்தில் கலந்துகொள்வதாகக் காட்டப்படவில்லை. ஏன் மோசே கலந்துகொள்ளவில்லை என்ற கேள்வி எழலாம்; ஆனால் அதற்கான விடை கிடைப்பது கடினம். இந்த விருந்து ஒரு நட்புறவு விருந்தாகவோ அல்லது உடன்படிக்கை விருந்தாகவோ இருக்கலாம். இந்த விருந்தின் பின்னணியைப் பார்க்கும்போது நன்றிப் பலிகள் செலுத்தப்பட்டபின் அனைவரும் பங்குகொண்ட நட்புறவு விருந்தாக இருக்கலாம் என எண்ணத்தோன்றுகிறது. இதை ஒரு உடன்படிக்கை விருந்தாகவும் கருதலாம். இஸ்ரயேல் மக்களுக்கும் மிதியானியர்களுக்கும் இடையில் ஏற்படுகின்ற ஒரு நட்புறவு உடன்படிக்கையாகவும் இருக்கலாம். ஆனால் எதையும் அறுதியிட்டு கூறமுடியாத நிலை உள்ளது.

விப 18 வது பிரிவின் இரண்டாவது பகுதியில், அதாவது 13 முதல் 27 வரையுள்ள இறைச்சொற்றொடர்களில் இஸ்ரயேலில் நீதி வழங்கும் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுவது பற்றிக் கூறப்படுகிறது. இப்பாடத்தில் மோசே நீதி இருக்கையில் அமர்ந்து மக்களுக்கு நீதி வழங்குகின்றார் (விப 18:13). நீதி இருக்கை மக்களுக்கு நீதி வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட இருக்கை. பிற்காலத்தில் ஒவ்வொரு நகரின் வாயிலிலும் நீதி இருக்கை அமைக்கப்பட்டது. அரசன் அந்த இருக்கையின் மீது அமர்ந்து குடிமக்களுக்கு நீதி வழங்கினான். இங்கே பாலைவனப் பயணத்தின்போது மோசே நீதி இருக்கையில் அமர்ந்து நீதி வழங்குவதாக காட்டப்படுகிறது. அறிஞர்களின் கருத்துப்படி இஸ்ரயேல் மக்கள் நடுவில் இந்தப் பழக்கம் அவர்கள் வாக்களிப்பட்ட நாட்டில் குடியேறிய பிறகுதான் தொடங்கியிருக்கவேண்டும். பாலைவனத்தில் பயணம் செய்கின்ற நேரத்தில்; இந்தப் பழக்கம் தொடங்கப்படுவதற்கு வாய்ப்பில்லை. ஏனெனில் இஸ்ரயேல் மக்கள் இன்னும் திருச்சட்டங்களைப் பெறவில்லை. யாவே ஆண்டவருடன் இன்னும் உடன்படிக்கை உறவு ஏற்படவில்லை. எனவே மக்கள் அமைதியாக வாழ்ந்த ஒரு சூழ்நிலையில் உருவான இந்தப் பழக்கம் பாலைவனப் பயணத்தின்போது மோசேயிடமிருந்து தொடங்குவதாக ஏற்றிக் கூறப்பட்டுள்ளது எனலாம். ஒரு சில அறிஞர்களின் கருத்துப்படி அரசன் யோசபாத்து யூதாவின் அரசனாக இருந்த காலத்தில் (கிமு 871-848) (காண் 2 குறிப் 19:5-11) கடைபிடிக்கப்பட்ட பழக்கங்களை ஒத்தது. எப்படியிருந்தாலும் பிற்காலத்தில் உருவான சில பழக்க வழக்கங்களை முன்னுக்கு ஏற்றி பதிவுசெய்யப்பட்டுள்ளது. அது மோசேயிடமிருந்து வந்த தீர்வாகப் பார்க்கப்படுகிறது. பண்டைய மேற்காசிய நாடுகளில் சமூகம், சமயம் மற்றும் வாழ்க்கை சார்ந்த பிரச்சினைகளையும் குற்றங்களையும் கேட்டு நீதி வழங்குவது தலைமைப் பதவிகளில் இருப்பவர்களின் பணியாக இருந்தது. அரசியல் அல்லது இராணுவத் தலைவராக இருப்பவர் நீதித்துறையின் தலைவராகவும் இருப்பார். மோசே இஸ்ரயேல் மக்களின் தலைவராக இருப்பதால் நீதி வழங்குவதும் அவரது பொறுப்பாகக் காட்டப்படுகிறது.

மோசே நீதி வழங்குபவர் மட்டுமல்ல; அவர் ஒரு இறைவாக்கினரும்கூட. கடவுளின் திருவுளத்தை மக்களுக்குக் கூறுபவர். இதை மனதில் கொண்டு விப 18:15 இல் வருகின்ற கடவுளின் தீர்ப்பை நாடி மக்கள் என்னிடமே வருகின்றனர் என்ற கூற்றைச் சிந்தித்தால், மோசே கடவுளின் திருவுளத்தை அறிந்தவராக இருக்கின்றார். கடவுளின் திருவுளத்தை அறிந்துகொள்வதற்காக மக்கள் அவரிடம் வருகின்றனர் என்றும் நாம் கூறமுடியும். மோசே கடவுளுக்கும் மக்களுக்கும் இடையில் ஒரு நடுநிலையாளராகச் செயல்படுகின்றார். மோசேயின் இந்தப் புரிதல்தான் தனியாக மக்களின் குறைகளைக் கேட்டு நீதி வழங்கச் செய்திருக்கவேண்டும். மோசேயின் இந்தப் புரிதலை இத்திரோ ஏற்கவில்லை. ஒரு மனிதர் அனைவருக்கும் நீதி வழங்குவதென்பது இயலாத ஒன்று. மோசே தொடர்ந்து இவ்வாறு செயல்படுவது அவருக்குக் களைப்பையும், சோர்வையும் ஏற்படுத்தலாம். மக்களும் நீதிக்காக நீண்டகாலம் காத்திருக்க வேண்டியது வரலாம் என இத்திரோ நினைக்கின்றார். எனவே அவருடைய பணி பகிர்ந்து செய்யப்படவேண்டும் என விரும்புகின்றார். அதனால் இத்திரோ மோசேயிடம் ஒரு படிநிலை நீதித்துறையை உருவாக்கக் கூறுகிறார். இந்தப் படிநிலை நீதித்துறையில் நீதி வழங்குவதற்காக நியமிக்கப்படுபவர்கள் பரம்பரை பரம்பரையாக வாரிசுகளாக வருபவர்கள் அல்ல; மாறாக, மக்கள் அனைவரிலும் திறமையும், இறையச்சமும், நாணயமும் கொண்டு கையூட்டை வெறுக்கும் பண்பாளர்களாக இருக்கவேண்டும் எனக்கூறுகிறார். அவ்வாறு இருப்பவர்களைத் தேர்வுசெய்து, அவர்களை ஆயிரமவர், நூற்றுவர், ஐம்பதின்மர். பதின்மர் ஆகிய குழுக்களின் தலைவர்களாக நியமிக்கக் கூறுகிறார். மோசே நீதி வழங்குவதை விட்டுவிட இத்திரோ கூறவில்லை; அல்லது கடவுளுக்கும் மக்களுக்கும் இடையில் நடுநிலையாளராக இருப்பதை தவிர்த்துவிட கூறவில்லை. கடவுளுடைய


நியமங்களையும் அவருடைய சட்டங்களையும் மோசேதான் தெளிவுபடுத்தவேண்டும். எனவே மோசே நீதி வழங்குபவராகச் செயல்படுபவது தவிர்க்க முடியாதது.

இத்திரோவின் பார்வையில் நீதித்துறை படிநிலையில் கீழ்நிலை தலைவர்களாக நியமிக்கப்படுபவர்கள் மக்களால் எப்போதும் பார்க்கக் கூடியவர்களாக இருப்பார்கள்; சிறிய காரியங்களை உடனுக்குடன் கேட்டு அவர்களால் விரைவில் நீதி வழங்கமுடியும். அவர்கள் எப்பொழுதும் மக்களுக்கு நீதி வழங்கட்டும். முக்கிய விவகாரங்கள் அனைத்தையும் உம்மிடம் கொண்டு வரட்டும். சிறிய காரியங்களில் அவர்களே நீதி வழங்கட்டும். ஆக, உமக்கும் சுமை குறையும். அவர்களும் உம்மோடு பொறுப்பேற்பர் (18:22) என அவர் கூறுவதிலிருந்து இது தெளிவாகிறது. இந்த சொற்றொடரைத் தொடர்ந்து, கடவுள் கட்டளையிடும் இக்காரியத்தை நீர் செய்தால், உம்மால் பளுவைத் தாங்க இயலும்; இம் மக்கள் அனைவரும் தம்தம் இடத்திற்கு மன அமைதியுடன் செல்வர் (18:23) எனவும் கூறுகின்றார். இங்கே அவர் மோசேக்கு உணர்த்த விரும்புவது என்ன என்பதை சிந்திப்பது நல்லது. கடவுள் கட்டளையிடும் இக்காரியம் என்ற சொற்றொடர் இத்திரோ கூறும் ஆலோசனைகள் கடவுளிடமிருந்து வருவதாகக் காட்டுகிறது. இத்திரோ கடவுளின் பிரதிநிதியாக மோசேக்கு இதை அறிவிக்கிறாரா? அல்லது மோசே கடவுளின் இறைவாக்கினராக இருப்பதால், இந்த ஆலோசனையைக் கடவுள்முன் எழுப்பி கடவுளின் திருவுளத்தை கேட்டுச் செயல்படுவதற்குக் கூறுகிறாரா? என்ற சந்தேகங்கள் எழுகின்றன. இதில் இரண்டாவது கருத்துதான் ஏற்புடையதாகத் தோன்றுகிறது.

இத்திரோ தனது கருத்துக்களை ஒரு கட்டளையாகவோ, கடவுளின் வார்த்தைகளாகவோ கூறுவதற்கு வாய்ப்பில்லை. மோசே கடவுளின் நியமங்களை அறிந்தவர் என்பதாலும் கடவுளின் திருவுளத்தை மக்களுக்கு அறிவிப்பவர் என்பதாலும் இந்த ஆலோசனையை கடவுளின் முன் கொண்டு சென்று அவரது கருத்தைக் கேட்டுச் செயல்படக் கூறுவதாகத்தான் கருதவேண்டும். மோசே தம் மாமனாரின் சொல்லைக் கேட்டு, அவர் சொன்னபடியெல்லாம் செய்தார் (18:24) என்ற சொற்றொடரை இதுவே கடவுளின் திருவுளம் என்பதை அறிந்து மோசே செயல்பட்டார் எனவும் புரிந்துகொள்ளலாம். மோசே இஸ்ரயேல் அனைவரிலும் திறமை வாய்ந்தவர்களைத் தேர்ந்தெடுத்து மக்களில் ஆயிரமவர், நூற்றுவர், ஐம்பதின்மர், பதின்மர் ஆகிய குழுக்களின் தலைவர்களாக அவர்களை நியமிக்கிறார். அவர்களும் மக்களுக்கு எப்பொழுதும் நீதி வழங்கி வந்தனர்; கடினமான சிக்கல்களை மோசேயிடம் கொண்டு சென்றனர். சிறிய காரியங்களில் அவர்களே நீதி வழங்கினர் என இப்பகுதி நிறைவுக்கு வருகிறது. இந்தப் படிநிலை நீதித்துறை இஸ்ரயேல் மக்களின் வாழ்க்கை வெறுமனே ஒரு பழங்குடி சமூகமாக மட்டும் இல்லாமல் ஒரு மையப்படுத்தப்பட்ட சமூகமாகவும் உள்ளது என்பதைக் காட்டுவதாக உள்ளது.

பயணம் தொடரும்...





ஞாயிறு

# மறையுரை

## திருவருகைக் காலம் முதல் ஞாயிறு

27-11-2022

முதல் வாசகம் – எசாயா 2:1-5
இரண்டாம் வாசகம் – உரோமையர் 13:11-14
நற்செய்தி வாசகம் – மத்தேயு 24:37-44


மறையுரை வழங்குபவர்

அருட்பணி. **ஜஸ்டின் சேவியர் ராஜ்**
**பங்குத்தந்தை, திருக்குடும்ப ஆலயம்,**
**பெருந்துறை, கோயமுத்தூர்.**





இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, 1960ம் ஆண்டு அமெரிக்க அதிபராக இருந்த ஜான் எஃப் கென்னடி அவர்கள் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவம். கனெக்டிக்கட் என்ற இடத்தில் ஒரு அவசர ஆலோசனைக்காக அதிகாரிகளோடு கூட்டம் நடத்திக் கொண்டிருந்தார். எதிர்பாராத விதமாக தீடீரென்று வானம் இருண்டு பலமான காற்றோடு மின்சாரம் தடைப்பட்டது. அரண்டு போன அதிகாரி ஒருவர் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்து இதுவரை பார்த்திராத வானிலை மாற்றத்தைக் கண்டு பயந்து அதிபர் கென்னடியிடம் இவ்வாறு சொன்னாராம். அதிபர் அவர்களே நாம் இதுவரை பார்க்காத மாற்றம் வானில் ஏற்பட்டிருக்கிறது. ஒருவேளை இது இயேசு சொன்ன இரண்டாம் வருகையின் அடையாளமாகக் கூட இது இருக்கலாம் என்றாராம். அதற்கு அதிபர் கென்னடி அதிகாரி அவர்களே, இது இயேசுவின் இரண்டாம் வருகையோ, அல்லது தீர்ப்பின் நாளாகவோக்கூட இருந்தாலும், நான் என் கடமையைச் செய்து கொண்டுதான் இருப்பேன். போய் மெழுகுதிரிகளைக் கொண்டு வாருங்கள் என்றாராம்.

இறை இயேசுவில் பிரிமானவார்களே, இன்று தாய் திருச்சபையோடு இணைந்து திருவருகைக் காலத்தைத் தொடங்குகிறோம். இது திருவழிபாட்டு ஆண்டின் துவக்க நாள். ஒருவகையில் புத்தாண்டு நாள் திருவருகைக் காலம் என்றாலே இயேசுவின் வருகைக்காக நம்மைத் தயாரிக்கின்ற காலம். இயேசுவின் வருகை என்றவுடன் நாம் மூன்று வகையான வருகைகளை நினைவில் கொள்ள வேண்டும்.

பெத்லகேமில் மாட்டிக் குடிலில் நடந்த இயேசுவின் வரலாற்றுப் பிறப்பு, இரண்டாவது கடைசி நாளில் பொதுத் தீர்வை நடத்த வரவிருக்கின்ற இயேசுவின் இரண்டாம் வருகை. எல்லாவற்றுக்கும் மேலாக, அன்றாட வாழ்வில் நம்மைத் தேடிவருகின்ற நிகழ்கால வருகை. இதோ, உலக முடிவுவரை உங்களோடு இருக்கிறேன் என்று சொன்ன இயேசு நற்கருணை வடிவில் இறைவார்த்தை விடிவில், திருவருட்சாதனங்கள் வடிவில், மிகச்சிறப்பாக நம் அயலார் வடிவில் நம்மைத் தேடி வந்து கொண்டேயிருக்கிறார் இயேசு. திருவருகைக்காலம் என்பது இயேசுவின் உடனிருப்பை அதிகம் உணரக்கூடிய காலம். முதல் வருகையின் போது இடையர்களுக்குச் சொல்லப்பட்ட நற்செய்தி, உங்களுக்காக தாவீதின் ஊரிலே மெசியா பிறந்துள்ளார். இன்று இயேசு எனக்காகப் பிறக்கப்போகிறார் என்ற உணர்வு இருந்தால்தான் திருவருகைக் காலம் மகிழ்ச்சியின் காலமாக இருக்கும். இறைவனின் வருகையின் போது அழிவு சக்திகள் அனைத்தும் அகற்றப்பட்டு உறவின் சக்திகள் பிறப்பெடுக்கும் என்ற நம்பிக்கையை இன்றைய முதல் வாசகத்தில் ஏசையா இறைவாக்கினர் கூறுகிறார். எங்கு ஆண்டவர் இருக்கிறாரரோ, அங்கு மகிழ்ச்சியும், ஒருங்கிணைப்பும் ஏற்படும் என்ற மகிழ்ச்சியை அனுபவிக்க வேண்டுமானால், இருளின் ஆடைகளை, அழிவின் சக்திகளை களைந்துவிட்டு, பகலுக்குரிய ஆடைகளான அன்பு, நீதி, நேர்மை போன்ற பண்புகளை கடைப்பிடிக்க வேண்டும் என்று இன்றைய இரண்டாம் வாசத்தில் புனித பவுல் கூறுகிறார்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் இயேசுவின் இரண்டாம் வருகை நாம் எதிர்பாராத நேரத்தில் நடக்கும். நாம் தயாராக இருக்க வேண்டும் என்று அழைக்கப்படுகிறோம். நோவானின் காலத்தில் கடவுளை மறந்து பணத்தையும், பதவியையும் மட்டும் கடவுளாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் அழிந்தார்கள். கடவுள் வார்த்தையை நம்பியவர்கள் மட்டும் அற்புதமாக காப்பாற்றப்பட்டார்கள். அது போல நாம் திருவருகைக் காலத்தில் நம்மை நல்லவிதமாகத் தயாரித்து இயேசுவின் வருகையை மகிழ்ச்சி நிறைந்த உள்ளத்தோடு எதிர்கொள்வோம்.

ஆமென்...



# திருவருகைக் காலம் முதல் ஞாயிறு

எசா 2:1-5, உரோ. 13:11-14, மத். 24:37-44

**27-11-2022**

## திருப்பலி முன்னுரை




பா. சேவியர்
திண்டுக்கல்


கிறிஸ்துவின் மனநிலையை தனதாக்கி, கிறிஸ்துவைப்போல் வாழ வேண்டும் என்ற சிந்தனையோடு திருவருகை காலத்திற்குள் அடியெடுத்து வைத்துள்ள அன்பு இறைமக்களே உங்கள் அனைவரையும் திருவருகை காலம் முதல் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

திருவருகை காலத்தின் இன்றைய முதல் ஞாயிறோடு புதிய திருவழிபாட்டு ஆண்டை தொடங்குகிறோம். திருவருகை காலம் விழிப்புக் காலம். மனமாற்றத்தின் காலம். இறைவனின் வருகைக்காய் தயார் செய்யும் காலம். இத்திருவருகை காலத்தில் இயேசுவின் வருகையைப் பற்றி தியானிக்கவும், அதற்காக நம்மை நாமே தயார்படுத்தவும் தாய் திருச்சபை நம்மை அழைக்கிறது.

இறைமகனின் வருகைக்காய் தயாராய் இருங்கள். அவரது வருகையை எதிர் நோக்கி இருங்கள், விழிப்பாயிருங்கள், ஆயத்தமாயிருங் கள். நாம் இரவின் மக்களல்ல, ஒளியின் மக்கள். இருளின் செயல்களை களைந்துவிட்டு கிறிஸ்துவை அணிந்து கொள்ளுங்கள் என்று இன்றைய வார்த்தை வழிபாடு பூபாளம் இசைத்து நம்மைத் தட்டி எழுப்புகிறது.

உலகில் போரும் சண்டை சச்சரவும் முற்றாக மறைந்து, அன்பும் அமைதியும் பூத்துக்குலுங்கும் அமைதி பூங்காவாய் இப்பூமி மலரவேண்டும் என்பது நமது எதிர்பார்ப்பு கிறிஸ்துவின் வருகையால் இது நிகழும் என்பது நமது நம்பிக்கை.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் கிறிஸ்துவின் வருகை உலகில் நிகழ்ந்தது. மனித வரலாற்றின் இறுதியில், உலக வரலாற்றின் கடைசி கட்டத்தில் கிறிஸ்துவின் மறுவருகை நிகழவிருக்கிறது. நாம் அவரை சந்திக்க தயாராய் இருக்கிறோமா? கிறிஸ்துவின் மனநிலையை நமதாக்கி கிறிஸ்துவைப் போல் வாழ முனைகிறோமா? என்பது குறித்து இத்திருபலி வழியாக சிந்திப் போம். வாருங்கள் இறை மக்களே, பாலகன் இயேசுவை தரிசிக்க, அவரது இரண்டாம் வருகையை எதிர்நோக்க நம் திருப்பயணத்தை தொடங்குவோம்.

## முதல் வாசக முன்னுரை

பாபிலோனிய படையெடுப்பால் எருசலேம் அழிவுற்றபின் எழுதப்பட்ட சமாதானத்தின் சாசனம் இன்றைய முதல் வாசகமாக அமைகிறது. உலகம் அமைதிப் பூங்காவாய் திகழ ஐக்கிய நாடுகளின் சபை இப்போது நாம் கேட்கவிருக்கும் வாசகத்தைத்தான் மேற்கோள்காட்டுகிறது. மெசியா வரும் காலத்தில் போரெல்லாம் ஒழிந்து, அமைதி நிலவும் என்ற எசாயாவின் இறை வாக்கை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

ஆண்டவரின் இரண்டாம் வருகைக் காக தம்மையே தயாரிக்க இன்றைய இரண்டாம் வாசகத்தின் வழியே பவுல் அடிகளார் அழைப்பு விடுக்கின்றார். இருளையும் பாவத்தையும் அறுதியாக முறியடித்து வெற்றிகொள்ளும் கட்டம் இயேசுவின் இரண்டாம் வருகையின் போது நிறைவுறும் என்பதையும், உறக்கமும் விழிப்பும், இருளும் ஒளியும் கிறிஸ்துவ வாழ்வில் கலந்துள்ளது என்ப தையும் எடுத்துரைக்கும் இவ்வாசகத்தை கவனமாகக் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) அன்பின் ஊற்றான இறைவா, உலக மாந்தர் உறக்கத்தைவிட்டு எழுந்திடவும், இருளை முறியடித்து ஒளியில் புகுந்திடவும் கிறிஸ்துவையே அணிந்து கொள்ளவும், அவர்களை நெறிப்படுத்தி வழிநடத்துகின்ற எம் திருத்தந்தை ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் உம் திருமகன் இயேசுவின் வழியில் நடந்து மக்களுக்காக உழைத்திட அவர்களுக்கு நிறைவான ஞானத்தையும், ஆற்றலையும், நல்ல ஆரோக்கியத்தையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) உயிருக்கும் அன்புக்கும் ஊற்றான இறைவா, பாவ வாழ்க்கையில் உழன்று திரியும் எங்களை, நாங்கள் எதிர் பாரா வேளையில் உமது கோபமாகிய பெரு வெள்ளம் அடித்துச் சென்றுவிடக்கூடும் என்பதை அறியாது வாழ்வதை உணர்ந்து, நாங்கள் மனம் மாறிய வாழ்க்கை நடத்தவும், நோவாவுக்குக் கிடைத்த ஆசீராய் இந்த திருவருகை காலம் அமைந்திடவும் அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) வாழ்வினை வழங்கும் வள்ளலே இறைவா, நாங்கள் அடுத்தவரை அன்பு செய்து, பிறரது தவறுகளை மன்னித்து ஏற்று, தீய இச்சைகளைத் தூண்டும் நாட்டங்களுக்கு இடம் தராமல் எப்போதும் நன்னடத்தை உள்ளவராய் வாழ்ந்து, உம் திருமகன் இயேசுவின் முதல் வருகையையும், அவர் தீர்ப்பு வழங்க வருகின்ற இரண்டாம் வருகையையும் எதிர்கொள்ள எங்களை நாங்களே தயார் செய்ய அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) ஞானத்தின் ஊற்றே இறைவா, எம் பங்கு மக்கள் அனைவரும் இறை அன்பிலும், பிறர் அன்பிலும் நாளும் வளரவும், குடும்பங்களில் சமாதானம் நிலவிடவும், பிள்ளைகள் கருத்தாய் படிக்கவும், அவர்களுக்கு நல்ல எதிர் காலம் அமையவும், நோய்வாய்ப்பட்டோர் நோய் நீங்கி நலம் பெறவும் அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



## எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை இயற்றிய இரட்சணிய மனோகரம்



**பொய்யும் வஞ்சமும் போக்கியே**
**பெய்யும் அன்பும் விடாமல்யான்**
**தெய்வ மேயுனைச் சேவித்திங்(கு)**
**உய்யும் நல்வரம் உதவுவாய்**

இயேசுவே, என் கள்ளமிக்க மனத்தில் இருந்து தீமையை விளைவிக்கும் பொய்யினையும், ஏமாற்றும் குணத்தையும் என்னைவிட்டு நீங்குமாறு செய்து உண்மை, அன்பு இரண்டும் பெருக வரமருள வேண்டும்.



# திருக்குறள் வழங்கும்
# சமூக நெறிச் சிந்தனைகள்

சிந்தனையாளர்
அருட்சகோதரி. **ஜெஸிந்தா ஜான்சன்** FSPM



## குறள் -21

**ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு**

### குறள் விளக்கம்

ஒழுக்கத்தில் நிலைத்து நின்று பற்று விட்டவர்களின் பெருமையைச் சிறந்ததாக போற்றி கூறுவதே நூல்களின் துணிவாகும்.

### சிந்தனை

ஒழுக்கத்தில் சிறந்தவர்களை உயர்ந்தவர்கள் என்கிறார் வள்ளுவர். ஒழுக்கத்தில் சிறந்தவர்கள் பெருமை சிறந்தவற்றுள் சிறந்தது என நூல்களும் கூறுகின்றன என்கிறார். ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்கிறார். அத்தகைய ஒழுக்கத்தை ஒருவனுக்கு ஒரே நாளில் பயிற்சிவிப்பது இயலாதது. சிறுவயது முதலே பயிற்சிவிக்கப்பட வேண்டும்.

சிறுவன் ஒருவன் பள்ளியிலிருந்து வீடு திரும்பும் போது வழியில் தோட்டத்தில் சில கீரைகளை பறித்து வீட்டுக்கு கொண்டு சென்றான். அவன் தாய், ஏதோ தெரியாமல் செய்துவிட்டான் என எண்ணி அதை பெரிதுபடுத்தாமல் சமைத்து கொடுத்தாள். சில நாட்களுக்கு பின் மாங்காய் கொண்டு வந்தான். சரி விளையாட்டாக செய்திருப்பான் என எண்ணி அதை வெட்டி உண்ணக் கொடுத்தாள். பின் ஒருநாள் பழம் திருடும்போது தோட்டக்காரர் அவனை கையும் மெய்யுமாக பிடித்து அவர் தாயாரிடம் ஒப்படைத்தார். அப்போது அவனுடைய தாய் என் மகன் அப்படிப்பட்டவன் அல்ல என சாதித்தாள்.

அவன் பெரியவனானபோது திருட்டையே தொழிலாக்கி பெரிய திருடனானான். ஒருநாள் லாக்கப்பில் தன் மகன் அடைபட்டிருப்பதை கேள்விபட்டு பார்க்கச் சென்றாள். அழுது புரண்ட அவளிடம் அம்மா! நான் கீரை, காய், பழம் கொண்டுவரும்போதே என்னை கண்டித்து ஒழுங்குபடுத்தியிருந்தால் இன்று இந்நிலையில் கண்டிருக்க தேவையில்லை என்றான் மகன்.

ஒழுக்கத்தில் சிறந்தவர் என்பதற்கு திருவிவிலியத்தில் சிறந்த எடுத்துக்காட்டு திருமுழுக்கு யோவான் ஆவார். மனிதராய் பிறந்தவர்களுள் திருமுழுக்கு யோவானைவிடப் பெரியவர் எவரும் தோன்றியதில்லை. ஆயினும் விண்ணரசில் மிகச் சிறியவரும் அவரினும் பெரியவரே என நான் உறுதியாக சொல்கிறேன் மத் 11:11 என்று இயேசுவே சான்று பகர்கின்றார். அதற்கு காரணம் அவரது ஒழுக்கம் நிறைந்த வாழ்வுதான். எச்சு+ழலிலும் ஒழுக்கசீலராக அவர் திகழ்ந்தார். மேலும், திருமுழுக்கு யோவான் வந்தார்: அவர் உணவு அருந்தவுமில்லை: திராட்சை மது குடிக்கவுமில்லை லூக் 7:33. இந்த அளவு நேர்மையாக வாழ்ந்த அவரையும் கொலை செய்தார்கள். ஏனென்றால் ஒழுக்ககேடு நிறைந்த சு+ழலில் ஒழுக்கசீலராய் வாழ்வது கடினம்.

இன்னுமாய் ஒழுக்கத்தின் இருவகைகளை விவேகானந்தர் எடுத்துக் கூறுகிறார்.

சுயநலம் தீய ஒழுக்கம், சுயநலம் அற்றதே நல்லொழுக்கம், சுயநலம் எதிர்மறையானது ஒழுக்கத்திலும் கூட அது ஒட்டிவிடக் கூடாது என்பதே விவேகானந்தரின் விருப்பம். சுயநலமற்ற ஒழுக்கம் சிறந்தது என்பதை கருத்தில் கொண்டு நல்லொழுக்கத்தோடு நல்லவர்களாக வாழ்வோம்.



# அகில உலக திருஅவைச் செய்திகள்

வழங்குபவர்
**திரு.வி.பி.ஆர்.கோவை**



நைஜீரியாவில் கத்தோலிக்க திருச்சபை சந்திக்கும் மிகப் பெரிய பிரச்னையாக, பிரிவினை வாதச் சபையினர்கள் நடத்தும் பொய்யான அற்புத சுகமளிக்கும் கூட்டங்கள் உள்ளன. பொய்யான தீர்க்கதரிசனங்களைக் கூறி மக்களை அவர்கள் ஈர்க்கின்றனர். அவர்கள் சமூக ஊடகங்களின் வழியாகவும், திட்டமிடப்பட்ட அற்புத சாட்சியங்களின் வழியாகவும் மக்களை ஏமாற்றுகின்றனர். அதனால் அதிகமான கத்தோலிக்கர்கள் வழிமாறிச் செல்கின்றனர். ஆகவே அவற்றைக் குறித்து மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும், கத்தோலிக்க விசுவாச ஒளியில் அவற்றை சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்று ஆயர்கள் மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

கடந்த நவம்பர் 12ம் தேதி, கத்தோலிக்க ஆசிரியர்களின் உலக ஒன்றியத்தின் பொதுச் சபையைச் சேர்ந்தவர்கள் பாப்பரசரைச் சந்தித்தார்கள். அவர்களிடம் அவர் பேசும்போது, சித்தாந்தத்தின் அடிப்படையில் மக்களை காலனித்துவப்படுத்தும் முறையை கல்வியில் பயன்படுத்துவது, மிகவும் அபாயகரமானது, அது எதிர்காலத்தில் பேரழிவை ஏற்படுத்திவிடும் என்று எச்சரிக்கை விடுத்தார். தாங்கள் வாழும் இடத்தின் கலாச்சாரத்தைப் பின்பற்றுவதும், அந்த இடத்தின் மொழியைப் பேசுவதும வேறு. ஆனால், கருத்தியலின் அடிப்படையில் காலனியமாக்குவது மனித ஆளுமையைச் சிதைக்கும் வன்முறையாகும், அது கிறிஸ்துவத்தின் கோட்பாடுகளுக்கு முரணானது என்றும் பாப்பரசர் கூறியுள்ளார்.

கானா நாட்டில், அக்காரா மறைமாவட்டத்தில் பணியாற்றிவரும் சலேசியர்கள் டெர்மா நியூடவுன் என்ற இடத்தில் வீதியோரம் வாழும் குழந்தைகளுக்காக புனித.டோம்னிக் இளையோர் மையத்தைக் கட்டியுள்ளார்கள். அனாதையாக வீதிகளில் சுற்றித் திரியும் குழந்தைகள் இளைஞர்கள் அங்கு வந்து தங்கி கல்வி பயிலவும், தொழிற்கல்வி கற்கவும் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்கள்.

மலேசியா மற்றும் கிழக்கு திமோருக்கான வத்திக்கானின் தூதுவர்வரும், பேராயருமான உஜெய்க் ஸாலுஸ்கி அவர்கள் ஆசியாவிலும் மற்றும் மலேசியாவிலும் உள்ள பொருளாதாரத்தில் நலவடைந்துள்ள ஆலயங்களின் வளச்சிக்காக மலேசிய மக்கள் அதிகமாக நன்கொடை கொடுக்க முன்வரவேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார்.

பிலிப்பைன்சில் இயங்கிவரும் இளைஞர் குழுவின் பெயர் த கபதான் பாரா சாடியோஸ் என்று பெயர். அதாவது இயேசுவின் இளைஞர்கள் என்று அதற்குப் பெயர். அது அமெரிக்க நாட்டின் உதவியுடன் இயங்கும் ஓர் இயக்கம். அது பிலிப்பைன்சில் இயங்கிவரும் சட்டவிரோத போதை மருந்து பழக்கத்திற்கு அடிமையாகும் இளைஞர்களை மீட்கும் பணியில் தங்களை ஈடுபடுத்தியுள்ளார்கள். போதை மருந்தினால், ஏராளமான இளைஞர்கள் சட்டவிரோத குற்றவாளிகளாக மாறிவருகின்ற இத்தருணத்தில்,இயேசுவின் இளைஞர்கள் குழுவில் உறுப்பினர்களாக உள்ள ஏறக்குறைய 10,000க்கும் அதிகமான இளைஞர்கள் போதையில் சிக்கித் தவிக்கும் இளைஞர்களை மீட்கும் பணியில் செயல்பட்டுவருகின்றார்கள்.

சர்வதேச தன்னாரவ சேவைக்கான கிறிஸ்தவ அமைப்பின் கூட்டமைப்பு, இத்தாலியைச் சேர்ந்தது. ஏற்கனெவே தயாரிக்கப்பட்ட பாப்பரசரின் உரையானது கடந்த நவம்பர் 14ம்தேதி அவர்களுக்கு வழங்கப்பட்டது. அதில் கிறிஸ்தவர்களின் மூன்று முக்கியப் பணிகளைக் குறித்து குறிப்பிட்டுள்ளார். அதில் ஒன்று தன்னார்வத் தொண்டு இரண்டு அமைதிக்கான பணிகள் மூன்றாவதான மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிகான பணி என்று அவர் கூறியுள்ளார். மக்களின் நல்வாழ்வுக்காக உழைப்பதே பொதுநிலையினருக்கான ஆகச்சிறந்த இறைப்பணி என்பதை அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

அமெரிக்க கத்தோலிக்க ஆயர்களின் மாநாடு கத்தோலிக்க மருத்துவ சங்கம், கத்தோலிக்க செவிலியர்களின் தேசிய சங்கம் மற்றும் தேசிய கத்தோலிக்க வாழ்வியல் மையத்துடன் இணைந்து அமெரிக்காவில் குடும்பக் கட்டுப்பாட்டுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மாத்திரையை அரசு அங்கீகரிக்கக்கூடாது என்று அறிவுறுத்தியுள்ளது.



# திருவருகைக் காலம் முதல் ஞாயிறு

## 27.11.2022 முதல் 03.12.2022

**27.11.2022 – ஞாயிற்றுக்கிழமை**
திருவருகைக் காலம் முதல் ஞாயிறு
**முதல் வாசகம் :** ஏசாயா 2:1-5
**இரண்டாம் வாசகம் :** ரோமையர் 13:11-14
**நற்செய்தி :** மத்தேயு 24:37-44

**28.11.2022 – திங்கட்கிழமை**
**முதல் வாசகம் :** ஏசாயா 4:2-6
**நற்செய்தி :** மத்தேயு 8:5-11

**29.11.2022 – செவ்வாய்கிழமை**
**முதல் வாசகம் :** ஏசாயா 11:1-10
**நற்செய்தி :** லூக்கா 10:21-24

**30.11.2022 – புதன்கிழமை**
**முதல் வாசகம் :** உரோமையர் 10:9-18
**நற்செய்தி :** மத்தேயு 4:18-22

**01.12.2022 – வியாழக்கிழமை**
**முதல் வாசகம் :** ஏசாயா 26:1-6
**நற்செய்தி :** மத்தேயு 7:21, 24-27

**02.12.2022 – வெள்ளிக்கிழமை**
**முதல் வாசகம் :** ஏசாயா 29:17-24
**நற்செய்தி :** மத்தேயு 9:27-31

**03.12.2022 – சனிக்கிழமை**
**முதல் வாசகம் :** ஏசாயா 30:19-21, 23-26
**நற்செய்தி :** மத்தேயு 9:35-10:1, 5-8



"You desire that which exceeds my humble powers, but I trust in the Compassion and mercy of the All - powerful God.

- St. Stephen-

# நலம் தரும் இயற்கை வளம்

## நலம் நாடும் நல்உள்ளங்களுக்கு இந்த வார நலத் தகவல்..!



**ஜே. அன்புரோஸ்**
கோபிச்செட்டிபாளையம்.

வணக்கம் நலம் காக்கும் நல் உள்ளங்களே..!

**ஒரு கிளாஸ் லெமன் நீருடன் ஒரு ஸ்பூன்** இவ்ளோ நன்மை இருக்கு!



உடலில் ஏற்படும் பல்வேறு உடல்நலப் பிரச்சினைகளுக்கு எலுமிச்சை நீர் பெரிய நன்மைகளை தரும். உடல் எடை குறைப்பு முதல் உடலில் நச்சு நீக்கம் வரை பல்வேறு உடல் பிரச்சினைகளுக்கு இயற்கை மருத்துவத்தில் எலுமிச்சை ஒரு முக்கியத்துவம் வாய்ந்தது. உங்கள் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்த இது ஒரு சிறந்த பானமாக இருக்கும்.

இருப்பினும் அதனுடன் ஒரு டீஸ்பூன் சியா விதைகளைச் சேர்ப்பது பல ஆரோக்கிய நன்மைகளுக்கு வழிவகுக்கும் சியா விதைகளில் நார்ச்சத்து அதிகமாக இருந்தாலும் எலுமிச்சை நீரில் ஆன்டிஆக்ஸிடன்ட்கள் மற்றும் வைட்டமின் சி அதிகம் உள்ளது. இது உங்கள் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவுகிறது. சியா விதை பல ஆரோக்கிய நன்மைகளைக் கொண்டிருப்பதில் அதை உங்கள் உணவில் சேர்ப்பது மிகவும் நன்மை பயக்கும்!

### சியா விதைகளுடன் எலுமிச்சை நீர் தரும் நன்மைகள்

நோய் எதிர்ப்பு சக்தியை பலப்படுத்துகிறது:

எலுமிச்சையில் வைட்டமின் சி, சிட்ரிக் அமிலம், கால்சியம் மற்றும் ஆன்டிஆக்ஸிடன்ட்கள் போன்ற ஊட்டச்சத்துக்கள் அதிகம் உள்ளன.

ஜர்னல் ஆஃப் ஃபார்மாசூட்டிகல் அண்ட் பயோமெடிக்கல் அனாலிசிஸில் வெளியிடப்பட்ட ஆய்வின்படி எலுமிச்சையில் ஆன்டி வைரல் மற்றும் பாக்டீரியா எதிர்ப்பு பண்புகள் உள்ளன, அவை நோயெதிர்ப்பு மண்டலத்தை பருவகால நோய்கள் மற்றும் தொற்றுநோய்களிலிருந்து பாதுகாக்கின்றன.

அதே சமயம் சியா விதைகளில் நார்ச்சத்து, வைட்டமின் பி, கால்சியம், ஒமேகா-3 கொழுப்பு அமிலங்கள், புரதம் மற்றும் மெக்னீசியம் ஆகியவை அதிகம் உள்ளன.

சியா விதைகளுடன் ஒரு கிளாஸ் வெதுவெதுப்பான எலுமிச்சை நீரைக் குடிப்பது பருவகால பிரச்சினைகளைத் தடுக்க உதவும்.

உங்கள் உடல் நச்சை நீக்குகிறது. உடல் தானாகவே நச்சுகளை வெளியேற்ற முடியும் என்றாலும், எலுமிச்சை நீர் உதவக்கூடும் என்று சிலர் கூறுகின்றனர். நச்சு நீக்கம் அனைத்து உறுப்புகளின் சரியான செயல்பாட்டை ஊக்குவிக்கிறது.

எலுமிச்சை நீருடன் சியா விதைகள் மலச்சிக்கல், வாயு தொல்லை, அஜீரணம் மற்றும் பிற செரிமான பிரச்சனைகளை தடுக்க உதவும்.

சியா விதைகளில் நார்ச்சத்து அதிகம் உள்ளது, இது செரிமான பிரச்சனைகள் வராமல் தடுக்கும். எடை இழப்பை துரிதப்படுத்துகிறது: உடல் எடையை குறைக்க பலர் வெதுவெதுப்பான எலுமிச்சை தண்ணீரை வெறும் வயிற்றில் குடிக்கிறார்கள்.

நீங்கள் உடல் எடையை குறைக்க முயற்சிக்கிறீர்கள் என்றால் அதில் சில சியா விதைகளை சேர்த்துக்கொள்ளுங்கள்.

இது ஊட்டச்சத்து மதிப்பை இரட்டிப்பாக்கும். எலுமிச்சை சாற்றில் உள்ள பாலிபினால்கள் கொழுப்பு திரட்சி, உடல் எடை, இன்சுலின் எதிர்ப்பு மற்றும் கொலஸ்ட்ரால் ஆகியவற்றை குறைக்கிறது.

மேலும் சியா விதைகளில் நார்ச்சத்து அதிகம் உள்ளது. இது உங்களை நீண்ட நேரம் முழுமையாக வைத்திருக்கும். எலுமிச்சை நீரில் உள்ள சியா விதைகள் கொலஸ்ட்ரால் மற்றும் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தவும் உதவும்.

இதய ஆரோக்கியத்தை பராமரிக்கிறது: சியா விதைகளில் கரையக்கூடிய மற்றும் கரையாத நார்ச்சத்து அதிகம் உள்ளது. இந்த இழைகள் உங்கள் இதயம் சிறப்பாக செயல்பட உதவும். சியா விதைகளை தவறாமல் உட்கொள்வது உங்கள் இதயத்தை ஆரோக்கியமாக வைத்திருக்கவும். இதய நோய்களைத் தடுக்கவும் உதவும்.

எலுமிச்சை தண்ணீர் சுவையாக இருக்கும். ஆனால் சியா விதைகளைச் சேர்ப்பதன் மூலம் அதை மேம்படுத்தலாம். இந்த பானம் உங்கள் உடல் எடையை குறைக்கவும் உங்கள் உடலை நச்சு நீக்கவும் இதய செயல்பாட்டை மேம்படுத்தவும் மற்றும் பல நோய்களைத் தடுக்கவும் உதவும்.

**நலம் காக்க நாமும் பருகி வளம் பெறுவோம்.**

நன்றி...
என்றும் உங்கள் சகோதரன் **அம்புரோஸ்**
தொடர்பு எண் : **9360456063**